




# தின தமிழ்

தினசரி காலை நாளிதழ்

DHINA TAMIL

RNI No : TNTAM/2023/85936








www.dhinatamil.com • மாற்றத்தின் ஆரம்பம் • dhinatamil

• பதிப்பு : நாகர்கோவில் • 21.04.2026 • மலர் 04 • இதழ்: 111 • Edition : Nagercoil • 21.04.2026 • Vol : 04 • Issue : 111 • Page : 4 • Rs. 5/-


# கலாசாரங்கள் அனைத்தும் சமநிலையில் இருக்க வேண்டும்

## கன்னியாகுமரியில் ராகுல்காந்தி பேச்சு

கன்னியாகுமரி, ஏப். 21

கன்னியாகுமரியில் நடைபெற்ற காங்கிரஸ் பொதுக்கூட்டத்தில் ராகுல் காந்தி உரையாற்றினார். அப்போது அவர் கூறியதாவது:

மணிப்பூரின் அமைதி சீர்குலைய பாஜகவே காரணம். தனிப்பட்ட மொழி, வரலாறு, பண்பாடு, கலாசாரம் சிதைக்கப்படக்கூடாது. அந்தந்த மாநிலங்கள்தான் அந்தந்த மாநிலங்களை ஆட்சி செய்ய வேண்டும். நாட்டின் அனைத்து கலாசாரங்களும் சமநிலையில் இருக்க வேண்டும். அதிமுக இப்போது வெற்று கூடாரமாகியுள்ளது. பிளவுவாத அரசியலை வளர்க்கும் பாஜக, ஆர்.எஸ். எஸை எதிர்த்து போராடுவதே நம் அரசியல் களம்.

அனைத்து மொழிகளுக்கும் பின்னால் ஒரு வரலாறு இருக்கிறது. ஒவ்வொரு மொழியும் பொக்கிஷம். தமிழ்நாட்டில் பாஜக நுழைவதற்கான கருவியாக அதிமுக உள்ளது. தமிழ் மொழியை பாதுகாப்பதில் உறுதியாக உள்ளோம். ஆர்.எஸ்.எஸ் சித்தாந்தத்தை எதிர்ப்பவர்கள் தமிழர்கள். தேர்தல் கட்டமைப்பை சீர்குலைப்பதே



பாஜகவின் நோக்கம். தென்மாநில தொகுதிகளின் எண்ணிக்கையை குறைக்க சதி நடைபெறுகிறது. பிரதமர் மோடியை டிரம்ப் கட்டுப்படுத்தியதுபோல, மோடியும் அதிமுகவை கட்டுப்படுத்த எண்ணம் கொண்டுள்ளார்

தமிழகத்தில் மகளிர் உரிமை திட்டம் எனும் சிறப்பான திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. எங்கள் கூட்டணி இதனை தொடர்ந்து செய்யும். 2 ஆயிரமாக உயர்த்த உறுதி அளித்துள்ளோம்"

இவ்வாறு அவர் கூறினார்.

### விசிக தவிர்க்க முடியாத கட்சியாக இருப்பதற்கு

## திமுகவும், கூட்டணிக் கட்சிகளுமே காரணம்: திருமாவளவன் பேச்சு



கும்பகோணம்

"தவிர்க்கமுடியாத அரசியல் கட்சியாக விடுதலை சிறுத்தைகள் இருக்கின்றது என்றால் அதற்கு காரணம் திமுகவும், கூட்டணி கட்சிகளும்தான். தமிழகத்தில் 8 தொகுதிகளில் போட்டியிடும் நாம், வெற்றி பெற வேண்டும் என கூட்டணி கட்சிகள் வீடு வீடாக சென்று வாக்கு சேகரிக்கின்றார்கள். ஆகவே, திமுக தோழமைக் கட்சி வேட்பாளர்களை நாம் வெற்றி பெற வைக்க வேண்டும்," என விடுதலை சிறுத்தைகள் கட்சித் தலைவர் திருமாவளவன் தெரிவித்து ள்ளார்.

கும்பகோணம் தொகுதி திமுக வேட்பாளரும், எம்எல்ஏவுமான சாக்கோட்டை க.அன்பழகனுக்கு வாக்கு கேட்டு விடுதலை சிறுத்தைகள் கட்சி தலைவர் தொல். திருமாவளவன் பேசியதாவது: விடுதலை சிறுத்தைகள் கட்சியினர், நடிகரின் பின்னால் சென்று கொண்டிருக்கின்றார்கள் என அண்மையில் சில வதந்திகள் பரவிக் கொண்டிருக்கின்றன. சினிமா மயக்கம் இல்லாதவர்கள், கொள்கை பிடிப்புள்ளவர்கள் நீங்கள் என்பது எனக்கு உறுதியாக தெரியும்.

விடுதலை சிறுத்தைகள் கட்சி மாநில கட்சியாக அங்கீரிகபட்டதற்கு வாக்கு ஒரு காரணமாக இருந்தாலும், கூட்டணி கட்சிகளும் காரணம். நாடு சுதந்திரம் பெற்று 80 ஆண்டுகளில் தென் இந்தியாவிலேயே அங்கீகாரம் பெற்ற கட்சி விடுதலை சிறுத்தைகள் கட்சிதான்.

தவிர்க்கமுடியாத கட்சியாக விடுதலை சிறுத்தைகள் இருக்கின்றது என்றால் அதற்கு காரணம் திமுகவும், கூட்டணி கட்சிகளும்தான். தமிழகத்தில் 8 தொகுதிகளில் போட்டியிடும் நாம், வெற்றி பெற வேண்டும் என கூட்டணி கட்சிகள் வீடு வீடாக சென்று வாக்கு சேகரிக்கின்றார்கள். ஆகவே, திமுக தோழமைக் கட்சி வேட்பாளர்களை நாம் வெற்றி பெற வைக்க வேண்டும்.

அதிமுக தற்போது அமித்ஷா அதிமுகவாக மாறி விட்டது. பாஜகஅதிமுக இரண்டு கட்சிகளுக்கும் கொள்கை அடிப்படையில் உறவு இல்லை. முன்னாள் முதல்வர் ஜெயலலிதா பாஜகவுடன் கூட்டணி இல்லை என்றார். ஆனால் அவர் காலமாகி விட்டார் என்ற துணிச்சலில் பாஜகவுடன், பழனிசாமி கூட்டணி வைத்துள்ளார். இது ஜெயலலிதாவிற்கு செய்த துரோகமாகும்.

திமுக கூட்டணி வெற்றி பெறக்கூடாது என பாஜக திட்டமிட்டு, நண்பர் விஜயை களம் இறக்கி விட்டுள்ளார்கள். அவருடன் ஆர்எஸ்எஸ் உறவில் இருக்கின்றது என்றால் பாஜகவுடன் உறவு என்பது அர்த்தம். நண்பர் விஜய், கட்சி தொடங்கி 3 ஆண்டுகளில் இது வரை அவர் பேசியது, திமுக வெறுப்பு, திமுக பற்றி தான் பேசியுள்ளார். ஆனால் விஜய், மோடி, அமித்ஷா ஆகியோரையும், சமத்துவம், சகோதரத்துவம் உள்ளிட்டவைகளை பற்றி பேசவில்லை. அவர் பாஜக கொள்கை எதிரி என்ற ஒரு வார்த்தை தவிர வேறு எதுவும் பேசமாட்டார். அதிமுக பாஜக கூட்டணியை வெற்றி பெற வைத்து ஆட்சியில் அமர வைக்க வேண்டும் என்பது தான் விஜய்யின் நோக்கமாகும். கிறிஸ்துவர்கள், இஸ்லாமியர்கள் வாக்கு திமுக கூட்டணிக்கு சென்று விடக்கூடாது என களம் இறக்கி விடப்பட்டவர் விஜய். அவருக்கு வாக்கு செலுத்தினால், பாஜகவிற்கு செலுத்துவதாகும். பாஜக, ஆர்எஸ்எஸ் அமைப்பினர் முகமூடி அணிந்து வருகிறார்கள். எனவே, கும்பகோணம் திமுக வேட்பாளர் சாக்கோட்டை க.அன்பழகனுக்கு வாக்களித்து பெருவாரியான வாக்கு வித்தியாசத்தில் வெற்றி பெறச் செய்ய வேண்டும்" என்று அவர் பேசினார்.






## விஜய் வேட்புமனுவில் சொத்து மதிப்பை குறைத்துக் காட்டியது முறைகேடானது: உயர் நீதிமன்றம்



சென்னை, ஏப். 21

இரு தொகுதிகளில் வேட்பு மனு தாக்கல் செய்த தவெக தலைவர் விஜய், ஒரு தொகுதியில் 100 கோடி ரூபாய் சொத்து மதிப்பை குறைத்து காட்டியது முறைகேடானது என சென்னை உயர் நீதிமன்றம் தெரிவித்துள்ளது.

தமிழகசட்டப்பேரவைத்தேர்தலில், தவெகதலைவர் விஜய் சென்னை பெரம்பூர் மற்றும் திருச்சி கிழக்கு ஆகிய இரு தொகுதிகளில் போட்டியிடுகிறார். இரு தொகுதிகளிலும் விஜய் தாக்கல் செய்த வேட்புமனுக்களில் முன்னுக்குப்பின் முரணான தகவல்கள் இடம் பெற்றுள்ளதாகவும், பெரம்பூர் தொகுதியில் தாக்கல் செய்த வேட்புமனுவில் சொத்துக் கணக்கைமறைத்துள்ளதாகவும்கூறி, வியாசர்பாடியைச் சேர்ந்த பெரம்பூர் வாக்காளரான விக்னேஷ் என்பவர் சென்னை உயர் நீதிமன்றத்தில் மனுத் தாக்கல் செய்துள்ளார்.

அந்த மனுவில், 'பெரம்பூர் தொகுதியில் தாக்கல் செய்த வேட்பு மனுவில், தனது சொத்து மதிப்பு, 115 கோடியே 13 லட்சத்து 63 ஆயிரம் ரூபாய் எனக் குறிப்பிட்டிருந்த விஜய், திருச்சி கிழக்கு தொகுதிக்கான வேட்புமனுவில், 220 கோடியே 15 லட்சத்து 62 ஆயிரம் ரூபாய் எனக் குறிப்பிட்டுள்ளார்.

திருச்சி கிழக்கு தொகுதியில் தாக்கல் செய்த வேட்புமனுவில் குறிப்பிட்ட சொத்து மதிப்பை விட, பெரம்பூரில்தாக்கல்செய்த வேட்புமனுவில் குறைவாக காட்டியது உண்மைத் தகவலை மறைத்ததற்கு சமம் என்பதால், விஜய் தாக்கல் செய்த வேட்புமனுக்களில் தெரிவித்துள்ள சொத்து விவரங்கள் முழுமையானவையா, உண்மையானவையா என விசாரிக்க, வருமான வரித்துறைக்கும், தேர்தல்ஆணையத்துக்கும் உத்தரவிட வேண்டும்' என மனுவில் கோரப்பட்டுள்ளது.

இந்த வழக்கு தலைமை நீதிபதி எஸ்.ஜே.தர்மாதிகாரி மற்றும் நீதிபதி ஜி.அருள்முருகன் அடங்கிய அமர்வு முன் விசாரணைக்கு வந்தது.

அப்போது, இரு தொகுதிகளில் வேட்பு மனு தாக்கல் செய்தவர், ஒரு தொகுதியில் 100 கோடி ரூபாய் வரை குறைத்து காட்டியது முறைகேடானது என நீதிபதிகள் தெரிவித்தனர்.

பின்னர்இந்தவழக்குதொடர்பாகபதில்அளிக்கும்படி வருமான வரித் துறைக்கு உத்தரவிட்ட நீதிபதிகள் விசாரணையை அடுத்த வாரத்துக்கு தள்ளி வைத்துள்ளனர்.

### தேர்தல் திருவிழாவால்

## மதுரை வாக்காளர் காட்டில் அடைமழை: நடப்பது என்ன?

மதுரை, ஏப். 21

மதுரை மாவட்டத்தில் சாலைக்கு, சாலை நின்று வாகனங்களை பரிசோதனை செய்யும் தேர்தல் அலுவலர்கள், குடியிருப்புகளில்வெளிப்படையாக கட்சியினர் வாக்காளர்களுக்கு பணம் விநியோகம் செய்வதை கண்டும், காணாமல் உள்ளதாக குற்றச்சாட்டு எழுந்துள்ளது.

மதுரை மாவட்டத்தில் வாக்காளர்களுக்குபணம், பொருட்கள் பட்டுவாடா செய்வதைத் தடுக்கவும், அவற்றை வாகனங்களில் கடத்துவதை தடுக்கவும் தொகுதிக்கு 9 பறக்கும் படையினர், 9 நிலையான கண்காணிப்புக் குழுவினர் என மொத்தம் 90 பறக்கும் படையினர், 90 நிலையான கண்காணிப்புக் குழுவினர் 24 மணி நேரமும் தீவிர கண்காணிப்பில் ஈடுபட்டுள்ளனர்.

ஆனால், தேர்தலுக்கு முன்பே முக்கிய அரசியல் கட்சியினர், தேர்தல் செலவுக்கும், வாக்காளர்களுக்கு வழங்குவதற்கும் பணத்தை தொகுதிகளில் கொண்டு போய் பதுக்கி வைத்து விட்டனர். நிலையான கண்காணிப்புக் குழுவினரும், பறக்கும் படையினரும் சாலைகளில் சென்று பரிசோதனை செய்ததில் இதுவரை மாவட்டத்தில் அரசியல் கட்சியினர் கடத்தியதாக பணம், பொருட்கள் பிடிக்கப்படவில்லை. 10 தொகுதிகளில் பொதுமக்கள் விழிப்புணர்வு இல்லாமல் கொண்டு சென்ற ரூ.2 கோடியே 88 லட்சத்து 18 ஆயிரம் மட்டும் பறிமுதல் செய்தனர். இது தவிர மது பாட்டில்கள், ரூ.51 கோடி மதிப்பள்ள நகைகள் போன்றவற்றை பறிமுதல் செய்தனர்.

இந்நிலையில் திமுக, அதிமுக ஆகிய கட்சிகள், தொகுதிகளில் தாங்கள் பதுக்கிவைத்த பணத்தை, கடந்த 2 நாட்களாக வாக்காளர்களுக்கு வெளிப்படையாக இரண்டு அல்லது மூன்று பேர் குழுவாக வாக்காளர் பட்டியலுடன் வீடு, வீடாகச் சென்று ரூ.1,000 வீதம் விநியோகம் செய்து வருகிறார்கள். ஆனால், தேர்தல் கண்காணிப்பு குழுவினர், தற்போது வரை தொகுதிகளில் கண்காணிப்பை தீவிரப்படுத்தாமல்சாலைகளில் ஒப்புக்கு வாகனச் சோதனை செய்கிறார்கள்.

இத்தனை கோடி பணமும் சாலை மார்க்கமாகத்தானே கட்சியினருக்கு வந்து சேர்ந்துள்ளது. தேர்தல் பறக்கும்படைக்கு தெரியாமல் இருந்தது எப்படி என்பது மிகப்பெரிய கேள்வியாக உள்ளது.

இதுகுறித்து அரசியல் கட்சியினர் கூறுகையில், "வாக்காளர் பட்டியில் உள்ளவர்களை மூன்று விதமாக பிரிக்கிறோம். தங்களுக்கு வாக்களிக்கக் கூடிய கட்சியினர் உள்ள வாக்காளர்கள் பட்டியல், நமக்கு வாக்களிக்கவே மாட்டார்கள் என்பவர்கள் உள்ள பட்டியல், அடுத்ததாக நடுநிலை வாக்காளர் பட்டியல் ஆகிய மூன்று விதமான பட்டியலை எடுக்கிறோம்.

இவற்றில் ஆளும் கட்சியினர், தங்களது சொந்த கட்சியினர், நடுநிலை வாக்காளர்கள், எதிர்கட்சியினரை சேர்ந்த சிலருக்கும் பணம் விநியோகம் செய்கின்றனர். ஆனால், அதிமுகவினர், தங்கள் கட்சியினரை சேர்ந்த வாக்காளர்கள், நடுநிலை வாக்காளர்களுக்கு மட்டும் கொடுக்கிறார்கள்.

இந்த அடிப்படையில் ஆளும்கட்சியினர் 60 முதல் 75 சதவீதம் வாக்காளர்களுக்கும், அதிமுகவினர் 60 சதவீதம் பேருக்கும் தலா ரூ.1,000 வீதம் விநியோகம் செய்து வருகின்றனர். நாளையுடன் இரு கட்சியினரும் பணத்தை விநியோகம் செய்து முடித்து விடுவார்கள்.

திமுகவை பொறுத்தவரை போட்டி அதிகம் உள்ள தொகுதிகள், அதிக முன்னணியில் வெற்றி பெற விரும்பும் முக்கிய திமுக வேட்பாளர்கள் இரண்டாம் கட்டமாகவும் ரூ.500 அல்லது ரூ.1,000 வழங்க திட்டமிட்டுள்ளதாகவும் கூறப்படுகிறது.

இரு கட்சியினரிடமும் வசதி உள்ளவர்கள், வசதியில்லாதவர்கள் என பாரபட்சமின்றி வாக்குக்கு பணம் பெற்று வருகிறார்கள். மிக ஒற்றுமையாக இரு கட்சியினரும் எழுதப்படாத ஒப்பந்தம் செய்து கொண்டு பணம் விநியோகம் செய்வதால், இந்த விவகாரம் தேர்தல் ஆணையத்துக்கு புகாராக வரவில்லை.

இரு தரப்பிலும் பணம் விநியோகிக்கும் திட்டம் இருப்பதும், மாறாக புகார் அளித்தால் வாக்காளர்களின் கோபத்துக்கு ஆளாக நேரிடும் என்பதாலும் புகார் தர முன்வருவதில்லை. பணம் விநியோகம் ஜோராக நடந்துவரும் நிலையில், பறக்கும்படையினர் சாலைகளில் நின்று பரிசோதனை செய்வதோடு தங்கள் கடமை முடிந்து விட்டதாக நினைத்து பணம் விநியோகத்தை கண்டும் காணாமல் இருந்து வருகிறார்கள்" என்றனர்.


தின தமிழ்

நிருபர்கள் தேவை

வெற்றிகரமாக தொடர்ந்து 4 ஆண்டுகளாக

தமிழகம் முழுவதும் பிரிண்ட் ஆகி வெளிவந்து கொண்டிருக்கும் தின தமிழ் நாளிதழுக்கு மாவட்ட வாரியாக நிருபர்கள் மற்றும் போட்டோகிராபர்கள் தேவை

தகுதிகள்

குற்றவழக்குகள் இருக்கக் கூடாது, முன் அனுபவம், பட்டதாரி, தமிழில் உரையாடுதல், தமிழில் பிழையின்றி எழுதுதல், தகவல் பரிமாற்றத் திறன்

மேற்கண்ட தகுதிகள் பெற்றிருப்பவர்கள் கீழ்க்கண்ட எண்ணிற்கு தொடர்பு கொள்ளலாம்

99944 66200 – 70102 64701

# சட்டமன்ற தேர்தல் அமைதியாக நடைபெற கிறிஸ்தவ திருச்சபைகளில் பிரார்த்தனை



கோவை ஏப்:21

கோவை போத்தனூர் கிறிஸ்துவ திருச்சபையின் ஒன்றிணைப்பு இயக்கம் சார்பாக வர இருக்கும் 2026 தேர்தலை முன்னிட்டு வெள்ளலூர் சாலையில் உள்ள சிஎஸ்ஐ ஐக்கிய ஆலயத்தில் சிறப்பு பிரார்த்தனை கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்தில் 2026 தேர்தல் களம் சிறப்பாக அமையவும் நல்லாட்சி மலரவும், உலக நாடுகளுக்கிடையே நல்லுறவு நிலவும் மக்களிடையே சமத்துவத்துவமும் சமாதானத்துவமும் ஏற்பட இப்பிரார்த்தனை கூட்டம் நடைபெற்றது

இக்கூட்டத்தை தலைமை உரையாக தலைவர் ஆர்இவி.எஃப் ஆர் ஆனந்தகுமார், செயலாளர் ஆர்இவி.எஃப் ஆர் ரசல்ராஜ், பொருளாளர் ஆர் இ வி.எஃப் ஆர் கெர்சோம் ஜேக்கப் ஆகியோரது முன்னிலையில் அனைத்து திருச்சபையில் மக்கள் கலந்து கொண்டு பிரார்த்தனை செய்தனர். நிகழ்ச்சியினை ஒருங்கிணைத்தவர் சிறுபான்மை பிரிவு சத்யராஜ் ஜவகர் என்பது குறிப்பிடத்தக்கது.

## குற்றாலத்தில் நடைபெற்ற வியாபாரிகள் சங்க கூட்டத்தில்

# திமுக வேட்பாளர் மருத்துவர் கலை கதிரவன் தீவிர வாக்கு சேகரிப்பு



தென்காசி ஏப்ரல் 21

தென்காசி மாவட்டம் குற்றாலத்தில் மே 5 திருவாரூரில் நடைபெறும் வணிகர் தின 43வது மாநில மாநாட்டிற்கான ஆலோசனைக் கூட்டம் தமிழ்நாடு வணிகர் சங்கங்களின் மாநில தலைவர் விக்ரமராஜா தலைமையில் தென்காசி மாவட்ட தலைவர் பால சுப்பிரமணி முன்னிலையில் நடைபெற்றது. தமிழகத்தில் சட்டமன்றத் தேர்தல் நெருங்குவதை ஒட்டி அரசியல் கட்சியினரின் பிரச்சாரங்கள் தீவிர மடைந்துள்ள நிலையில் மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணியில் தென்காசி சட்டமன்ற தொகுதியில் போட்டியிடும் திமுக வேட்பாளர் மருத்துவர் கலை கதிரவன் குற்றாலத்தில் நடைபெற்ற தென்காசி மாவட்ட வணிகர் சங்க வியாபாரிகள் ஆலோசனை கூட்டத்திற்கு வருகை புரிந்த அவர் அங்கு வந்திருந்த வியாபாரிகளிடம் தேர்தல் வாக்குறுதிகள் குறித்த துண்டு பிரசுரங்களை வழங்கி தீவிர வாக்கு சேகரிப்பில் ஈடுபட்டார் அப்போது அவர் பேசியதாவது தமிழ்நாடு வணிகர் சங்கத்தின் ஆதரவு எப்பொழுதும் திராவிட முன்னேற்றக் கழகத்திற்கு உள்ளது அதே போல் மீண்டும் முதலமைச்சர் ஸ்டாலின் தலைமையிலான திமுக அரசு அமைந்த உடன் தமிழ்நாடு வணிகர் சங்கத்தின் கோரிக்கைகள் அனைத்தும் நிறைவேற்றப்படும் அதனால் வியாபாரிகள் அனைவரும் உதயசூரியன் சின்னத்திற்கு ஆதரவு தரும்படி கேட்டுக் கொண்டார் திமுக வேட்பாளர் மருத்துவர் கலை கதிரவனுடன் வாக்கு சேகரிக்க முன்னாள் தெற்கு மாவட்ட திமுக செயலாளர் சிவ பத்மநாதன் மற்றும் திமுக மாநில இணை அமைப்பு செயலாளர் அன்பகம் கலை ஆகியோர் உடன் வந்திருந்தனர். குற்றாலத்தில் நடைபெற்ற தென்காசி மாவட்ட வணிகர் சங்கத்தின் ஆலோசனைக் கூட்டத்தில் தமிழ்நாடு வணிகர் சங்க மாநில கூடுதல் செயலாளர் காளிதாஸ், மாநிலத் துணைத் தலைவர் கோல்டன் செல்வராஜ், மண்டல தலைவர் வைகுண்டராஜா, மாநில இணை செயலாளர் நாராயண சிங், தென்காசி தெற்கு மாவட்ட மூத்த தலைவர் பரமசிவன், மாவட்ட செயலாளர் சந்திரமதி ராஜா ,மாவட்ட பொருளாளர் முகமது இப்ராஹிம், நகரப் பொருளாளர் ரசூலிதின், வடக்கு மாவட்ட பொருளாளர் கலைவாணன், இளைஞர்அணிஅமைப்பாளர் காளிமுத்து, இளைஞர் அணி துணை அமைப்பாளர் முத்துராஜா, துரைமுருகன் மற்றும் தென்காசி மாவட்ட வணிகர் சங்கத்தை சேர்ந்த முக்கிய நிர்வாகிகள் உறுப்பினர்கள் கலந்து கொண்டனர்.



உழைப்பாளி மக்கள்ஜனநாயக கட்சி சார்பாக ஊத்தங்கரை சட்டமன்ற தொகுதி அதிமுக வேட்பாளர் டி,எம், தமிழ்செல்வனுக்கு சென்னப்ப நாயக்கனூர் கிராமத்தில் கட்சியின் நிறுவன தலைவர் எஸ், சுதாகர் இரட்டை இலைக்கு வாக்கு சேகரத்தினர் ,உடன் மாநில மாவட்ட நிர்வாகிகள் கலந்து கொண்டனர்,

# திருச்சி தங்க நகையை உரியவரிடம் ஒப்படைத்த ரயில்வே போலீசார்



திருச்சி, ஏப். 21

திருச்சி ரயில் நிலையத்துக்கு வந்த ராக்போர்ட் எக்ஸ்பிரஸ் ரயிலில் ரயில்வே போலீசார் சோதனை மேற்கொண்டபோது, கேட்பாரற்ற நிலையில் ஒரு பைகிடந்தது.அந்தப்பையைசோதனைசெய்தபோது, அதில் தங்க நகை உள்ளிட்ட பொருட்கள் இருந்தன. பையின் விவரங்களின்படி, அண்ணாமலை நகரைச் சேர்ந்த தேவராஜ் என்பவர் வரவழைக்கப்பட்டு, அவரிடம் அந்தப் பை ஒப்படைக்கப்பட்டது

# முசிறியில் விவசாயிகள் சாலை மறியல்



திருச்சி, ஏப். 21

திருச்சி மாவட்டம் முசிறியில் வடகரை வாய்க்கால் மூலம் சுமார் 1000 ஏக்கரில் வாழை, வெற்றிலை, நெல் சாகுபடி செய்யும் விவசாயிகள், கோடை காலத்தில் வாழை கருகும் நிலையிலும், வாய்க்காலில் தண்ணீர் வராததாலும் பெரும் பாதிப்புக்குள்ளாகியுள்ளனர். பலமுறை வலியுறுத்தியும் தண்ணீர் திறந்து விடப்படாததால், தேசிய தென்னிந்திய நதிகள் இணைப்பு சங்க தலைவர் அய்யாக்கண்ணு தலைமையில் 50க்கும் மேற்பட்ட விவசாயிகள் முசிறி ஆற்று பாசன கோட்ட அலுவலகம் முன்பு திடீர் சாலை மறியல் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

# திருச்சியில் கஞ்சா விற்ற பெண் கைது

திருச்சி, ஏப். 21

திருச்சி ராம்ஜிநகர் காவல் நிலைய எல்லைக்குட்பட்ட புதுக்காட்டூர் பகுதியில் கஞ்சா விற்பனை நடைபெறுவதாக கிடைத்த தகவலின் பேரில் போலீசார் சோதனை நடத்தினர். அப்போது மில் காலனி பகுதியைச் சேர்ந்த மல்லிகா என்ற பெண் போலீசாரிடம் சிக்கினார். அவரிடம் இருந்து 110 கிராம் கஞ்சாவை பறிமுதல் செய்த போலீசார் அவரை கைது செய்தனர்

## கன்னியாகுமரி மாவட்டத்தில்

# ஆறு சட்டமன்றத் தொகுதிகளிலும் திமுக கூட்டணியே வெல்லும்

### அகில இந்திய தமிழர் கழகம் முத்துக்குமார் கருத்து



நாகர்கோவில் ஏப்ரல் 21

தமிழகத்தில் மீண்டும் திமுக ஆட்சியே உருவாக்கும் என்றும், அதே போன்று கன்னியாகுமரி மாவட்டத்தில் உள்ள ஆறு சட்டமன்றத் தொகுதிகளிலும் திமுககூட்டணியேவெல்லும்என்றும்அகில இந்திய தமிழர் கழகத்தின் நிறுவனர் முத்துக்குமார் தெரிவித்துள்ளார்.

மேலும் அவர் கூறியதாவது:

தமிழகத்தில் மீண்டும் திமுக ஆட்சியே மலரும் என்பதில் எந்த சந்தேகமும் இல்லை. தி.மு.க தலைவர் மு.க.ஸ்டாலினின் தனிப்பட்ட மாஸ், மற்றும் மகளிர் உதவி தொகை, மகளிர் இலவச பேருந்து போன்ற பல திட்டங்கள் மக்களிடம் சென்றடைந்ததின் அடிப்படையில் மீண்டும் தமிழகத்தில் திமுக ஆட்சியே மலரக் கூடிய வாய்ப்புள்ளது.

மேலும் கன்னியாகுமரி மாவட்டத்தில் உள்ள ஆறு சட்டமன்றத் தொகுதிகளிலும் திமுக கூட்டணியே வெற்றி பெறக் கூடிய நிலை உள்ளது. கன்னியாகுமரி சட்டமன்றத் தொகுதி திமுக வுக்கு இழுபறியாக இருக்கும் என்கிறார்கள். அது தவறான பார்வை. அதிமுகபொதுச்செயலாளர்எடப்பாடிபழனிசாமிக்கு என்று தனிப்பட்ட மாஸ் எதுவும் கன்னியாகுமரி தொகுதிக்குள்இல்லைஎன்பதால்கடைசிதருவாயில் திமுகவே கன்னியாகுமரியில் வெல்ல கூடய நிலை உள்ளது.

இவ்வாறு முத்துக்குமார் கூறியுள்ளார்.

# திருச்சி: லியோனி மீது கண்ணாடி பாட்டில் வீசி தாக்குதல்



திருச்சி, ஏப். 21

திருச்சி கிழக்குத் தொகுதியில் தேர்தல் பிரச்சாரத்தின் போது, திமுக வேட்பாளர் இனிகோ இருதயராஜுக்காக வாக்கு சேகரித்த பட்டிமன்ற பேச்சாளர் லியோனிமீதுகண்ணாடி பாட்டில் வீசப்பட்டு ள்ளது. அதிர்ஷ்டவசமாக, அவர் காயமின்றி உயிர் தப்பினார். திருச்சி கிழக்குத் தொகுதி தற்போது திமுக வசமுள்ளது

# நாட்டுபடகு மீனவர்களுக்கு 350ல் இருந்து 500 ஆக டீசல் உயர்த்தப்படும் பழுதடைந்த படகுகளை மீட்க சிலுவை படகு அமைக்கப்படும்

### மீனவ மக்களிடம் வாக்கு சேகரித்த விளாத்திகுளம் அதிமுக வேட்பாளர்.



விளாத்திகுளம் ஏப் 21

தூத்துக்குடி மாவட்டம் விளாத்திகுளம் தொகுதி அதிமுக வேட்பாளராக போட்டியிடும் சத்யா தேசிய ஜனநாயக கட்சி கூட்டணியினருடன் இணைந்து வேம்பார் கிராமத்தில் உள்ள கல்விக்கண் திறந்த கர்மவீரர் காமராஜரின் திருவுருவ சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார். அதனைத் தொடர்ந்து வேம்பார் வேம்பார் பேருந்து நிலையம், சிலுவைபுரம், கலைஞானபுரம், பெரியசாமிபுரம், குஞ்சையாபுரம், பச்சையாபுரம், உள்ளிட்ட மீனவ மக்கள் அதிகம் வசிக்கும் பகுதிகளில் இரட்டை இலை சின்னத்திற்கு தீவிரவாக்கு சேகரிப்பில் ஈடுபட்டார்.

அப்போது பேசிய சத்தியா நாட்டுப் படகு மீனவர்களுக்கு 350 ல் இருந்து டீசல் 500 லிட்டராக உயர்த்தப்படும். விற்பனை வரிரத்து செய்யப்பட்ட எரிபொருள் மாதம் 4000 லிட்டர் வீதம் மேம்படுத்து தொழிலுக்காக வழங்கப்படும்.

கடலிலே மீன் பிடிக்கின்ற பொழுது விபத்துக்குள்ளாகி மீட்கப்படாமல் இருக்கின்ற மீனவர்களின் குடும்பங்களுக்கும், மருத்துவ வசதி வழங்கப்படாமல் நோயினால் கடலில் உயிரிழக்கின்ற மீனவர்களின் குடும்பங்களுக்கும் விபத்து காப்பீடாக 25 லட்சம் வழங்கப்படும் கடலிலே பாதிப்புக்குள்ளாக கூடிய மீனவர்களையும் மீன்பிடி படகுகளையும் மீட்பதற்கு மீனவ மீட்பு குழு ஏற்படுத்தப்படும். கடலில் பொழுதடைந்த படகுகளை மீட்க கடற்கரைப் பகுதியில் இழுவைபடகு அமைக்கப்படும், மழை வெள்ள காலங்களில் முகத்துவாரம் தூர்வாரப்படும், மேம்பாடு பகுதியில் கூடுதலாக தூண்டில் வளைவு பாலம் அமைக்கப்படும், மீனவர்களுக்கு மானியத்துடன் கூடிய கடன் வசதி வழங்கப்படும், உள்நாட்டு மீனவர்கள் நலன் கருதி ஏரிகளிலும் குளங்களிலும் மீன் வளர்ப்பை ஊக்கப்படுத்த சிறப்பு திட்டம் செயல்படுத்தப்படும். குளங்களிலும் ஆறுகளிலும் உள்நாட்டு மீனவர்கள் சிரமம் இன்றி மீன் பிடிக்கமீனவர்கூட்டுறவு சங்கங்கள் மூலம் வலை மற்றும் உபகரணங்கள் விலையில்லாமல் வழங்கப்படும். 65 வயதுக்கு மேற்பட்ட மீனவர்களுக்கு மீனவர் நலவாரியம் மூலம் மாதம் 2500 ரூபாய் ஓய்வூதியம் வழங்கப்படும். அதேபோல் திமுக ஆட்சியில் பெண்களுக்கான பாதுகாப்பு தற்போது வரை கேள்விக்குறியாக உள்ளதாகவும், எங்கு பார்த்தாலும் போதை கலாச்சாரத்தினால் சட்ட ஒழுங்கு சீர்கேடு அடைந்துள்ளது, எனவே மக்களுக்கான நல்லாட்சி அமைந்திட இரட்டை இலை சின்னத்திற்கு வாக்களிக்குமாறு சத்யா தீவிர வாக்கு சேகரிப்பில் ஈடுபட்டார்.

இந்நிகழ்வில் அதிமுக கிழக்கு ஒன்றிய செயலாளர் ராமச்சந்திரன், பாஜக மாவட்ட செயலாளர் சரவணன் கிருஷ்ணன், பாஜக தெற்கு ஒன்றிய தலைவர் சுயம்பு, தெற்கு ஒன்றிய பார்வையாளர் பார்த்திபன், கந்தசாமி அம்மா மக்கள் முன்னேற்ற கழக ஒன்றிய செயலாளர் முத்துராமலிங்கம், கணபதி மற்றும் தேசிய ஜனநாயக கூட்டணிக் கட்சிகளைசேர்ந்த ஏராளமான நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.




# பன்னந்தூரில் குழந்தை திருமணம் குறித்த விழிப்புணர்வு கருத்தரங்கம்

கிருஷ்ணகிரி, ஏப். 21

கிருஷ்ணகிரி மாவட்டம் பண்ணந்தூரில் பெருமாள் கோயில் வளாகத்தில் அட்சய திருதியை தினத்தில் குழந்தை திருமணம் வேண்டாம் என்பது குறித்த விழிப்புணர்வு கருத்தரங்கு நடைபெற்றது.

கிராமிய பெண்கள் முன்னேற்ற அறகட்டளை சார்பில் ஏற்பாடு செய்யபட்டு இருந்த இந்நிகழ்ச்சியில் குழந்தை திருமணம் வயது பற்றியும் அதனால் ஏற்படும் தீமைகள் பற்றியும் குழந்தை திருமணம் தடுப்பு சட்டம் 2006 ன் படி தண்டனைகள் பற்றியும் விளக்கம் அளிக்கப்பட்டது இந்நிகழ்ச்சியில் மாவட்ட குழந்தைகள் நல குழும உறுப்பினர் பாக்கியலட்சுமி தொண்டு நிறுவன இயக்குநர் அலமேலு மாவட்ட ஒருங்கிணைப்பாளர் செந்தில் ராஜா மற்றும் கள பணியாளர்கள் ஊர் பொதுமக்கள் . மகளிர் சுய உதவி குழு உறுப்பினர்கள். இளைஞர்கள். சமூக ஆர்வலர்கள். ஓய்வு பெற்ற ஆசிரியர்கள். அரிமாசங்க பொறுப்பாளர்கள். கோயில் பூசாரிகள் . முன்னால் இராணுவ வீரர்கள் அங்கன்வாடி பணியாளர்கள். சமூக சேவகர்கள். குழந்தைகள். மக்கள் பிரதிநிதிகள் ஆகியோர் திரளாக பங்கேற்று சிறப்பித்தனர் இறுதியில் குழந்தை திருமணம் இல்லாத பஞ்யத்தாக உருவாகக்கிட உறுதி மொழியும் எடுத்துக்கொள்ளப்பட்டது கூட்டம் முடிவில் கள பணியாளரான வரலட்சும் நன்றி கூறினார்

## கோவை சூலூர் சட்டமன்ற தொகுதி

# தவெ க வேட்பாளருக்கு பொதுமக்கள் உற்சாக வரவேற்பு



கோவை ஏப்:21

கோவை மாவட்டம் சூலூர் சட்டமன்ற தொகுதி தவெக வேட்பாளர் என் எம் சுகுமார் சூலூர் பஸ் நிலையம்

அதன்சுற்றியுள்ளபகுதிகளில் உள்ள பொதுமக்களிடம் நேரில் சென்று சந்தித்தார். பொதுமக்கள் அவருக்கு வீரவால் கொடுத்தும் மாலை அணிவித்தும் ஆரத்தி எடுத்தும் உற்சாகமாக வரவேற்றனர்.

மேலும் அப்பொதுமக்கள் இந்த பகுதியில் உள்ள குளம் சீரமைக்க வேண்டும், மின்விளக்குகள், மற்றும் பல்வேறு கோரிக்கைகளை முன் வைத்தனர். இவை அனைத்தும் தலைவர் இடத்தில் சொல்லி இந்தகுறைகளைதீர்ப்பேன் என்று விசில் சின்னத்திற்கு வாக்கு அளிக்குமாறு பிரச்சாரம் மேற்கொண்டார். உடன்தொண்டர்கள்ஏராளமான கலந்து கொண்டு வாக்கு சேகரித்தினர்.



தருமபுரி மாவட்டம் பென்னாகரம் வட்டாட்சியர் அலுவலகத்தில் தமிழ்நாடு சட்டமன்ற பொதுத்தேர்தல் 2026 ஏப்ரல் 23 அன்று வாக்குப்பதிவு நடைபெற உள்ளதை யொட்டி பென்னாகரம்சட்டமன்றதொகுதிக்குஉட்பட்டஅனைத்துவாக்குச்சாவடிமையங்களுக்கு தேவையான பொருட்கள் பிரித்து அனுப்புவதற்கான தயார் செய்யும் பணி நடைபெற்று வருவதை மாவட்ட தேர்தல் அலுவலர்/ மாவட்ட ஆட்சியர் சதீஷ் நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார். தேர்தல் நடத்தும் அலுவலர் கோபு, உதவி தேர்தல் நடத்தும் அலுவலர் சண்முகசுந்தரம் உள்ளிட்ட தொடர்புடைய அரசு அலுவலர்கள் உள்ளனர்.



## நம்பிக்கையின் அலைகள்

# ஆட்டிசம் கொண்ட 4 குழந்தைகள் இந்தியா-இலங்கை இடையே 60 கி.மீ கடலில் நீச்சல் செய்து உலக சாதனை

ராமநாதபுரம், ஏப்.20

மிகுந்த துணிவு, மனவலிமை மற்றும் உறுதியின் சிறப்பான வெளிப்பாடாக, ஆட்டிசம் கொண்ட நான்கு சிறுவர் இந்தியா மற்றும் இலங்கை இடையிலான பாக் ஜலசந்தி கடலில் நீரிணையை கடந்து 60 கிலோ மீட்டர் இருவழி திறந்த கடல் நீச்சல் செய்து உலக சாதனை புரிந்தனர்.

நம்பிக்கையின் அலைகள் "இந்தியா இலங்கை இருவழி கடல் நீச்சல் சாதனை" எனப் பெயரிடப் பட்டுள்ள இந்த முயற்சி, யாதவி அறக்கட்டளை, விளையாட்டு அகாடமி மற்றும் இந்தியன் ஆட்டிசம் சென்டர் உடன் இணைந்து நடத்தியது.

இந்த நீச்சல் முயற்சி 2026 ஏப்ரல் 18ஆம் தேதி அரிச்சல் முனை கடற்கரையில் மதியம் 03.30 மணியளவில் தொடங்கி, ஏப்ரல் 19ஆம் தேதி காலை 09.27க்கு நிறைவு செய்தனர். இந்த சாதனை முயற்சியை வேர்ல்ட் புக் ஆஃப் ரெக்கார்ட்ஸ் மூலம் அதிகாரப்பூர்வமாக பதிவு செய்தனர்.

ஸ்ரீ அஷ்வத், லவ், குஷ் மற்றும் தன்வேஷ் ஆகிய 9 முதல் 11 வயதுடைய குழந்தைகள் 24 மணி நேரம் இடையறாத ரிலே முறையில் இந்தியா – இலங்கை – இந்தியா பாதையில் கடலில் நீந்தினர். இந்த முயற்சியின் போது, கடுமையான கடல் நீரோட்டங்கள், மாற்றமடையும் காலநிலை மற்றும் இரவு நேர நீச்சல் போன்ற பல சவால்களை எதிர்கொண்டனர். கடந்த எட்டு மாதங்களாக, இக்குழந்தைகள் நீச்சல் குளங்களிலும் திறந்த கடல் சூழலிலும் தீவிரமான பயிற்சிகளை மேற்கொண்டு இந்தசாதனைக்கு தயாராகினர்.

" முடியாது என்பது இல்லை" என்பதே இந்த முன்முயற்சியின் கருப்பொருள் ஆகும். இதன் மூலம் ஆட்டிசம் குறித்த உலகளாவிய விழிப்புணர்வை ஏற்படுத்துவது, சிறப்பு தேவைகள் கொண்ட குழந்தைகளின் திறன்களை வெளிப்படுத்துவது, சமூகத்திற்கு உண்மையான சாதனைகளை அறியச்செய்து ஊக்கமளிப்பது மற்றும் மக்களின் ஒட்டுரிமை குறித்து விழிப்புணர்வை ஏற்படுத்துவதை நோக்கமாகக் கொண்டுள்ளனர்.

இந்த நிகழ்ச்சிக்கு சென்னைடாக்டர்காமாட்சி நினைவு மருத்துவமனை முழுமையான மருத்துவ மற்றும் பாதுகாப்பு ஆதரவை வழங்கியது. அவசர மருத்துவ சேவைகள், அனுபவமிக்க மருத்துவர்கள் மற்றும் தொடர்ந்து உடல் நிலை கண்காணிப்பு போன்ற அனைத்து வசதிகளும் ஏற்பாடு செய்யப்பட்டது. மேலும், பாதுகாப்பு குழு, பயிற்சியாளர்கள் மற்றும் படகு குழுவினர் முழு நேரமும் இணைந்து செயல்பட்டு குழந்தைகளின் பாதுகாப்பை உறுதி செய்தனர். யாதவி சிறப்புத் தேவைகள் விளையாட்டு அகாடமியின் நிறுவனர் மற்றும் தலைமைப் பயிற்சியாளரான சதீஷ் சிவகுமார் கூறுகையில், "இந்த நீச்சல் போட்டி என்பது வெறும் தூரத்தைப் பற்றியது மட்டுமல்ல இது மக்களின் கண்ணோட்டங்களை மாற்றுவதைப் பற்றியது ஆகும். திறமை என்பது வரம்புகளைக் கடந்தது என்பதை இந்த குழந்தைகள் உலகிற்கு நிரூபித்து வருகிறார்கள். நம்பிக்கையின் அலைகள் ' என்பது ஒவ்வொரு பெற்றோருக்கும், ஒவ்வொரு கல்வியாளருக்கும், ஒவ்வொரு சமூகத்திற்கும் ஒரு செய்தியாகும் சரியான ஆதரவுடன், ஒவ்வொரு குழந்தையும் அசாதாரணமானதைச் சாதிக்க முடியும் என்பதே ஆகும்" என்றார்.



# கடையநல்லூர் சட்டமன்ற தொகுதி வேட்பாளர் கிருஷ்ணமுரளியை ஒரு லட்சம் வாக்குகள் வித்தியசத்தில் வெற்றி பெற வைக்க வேண்டும்

## தொகுதி மக்களிடம் அமமுக பொதுச்செயலாளர் டிடிவி தினகரன் வேண்டுகோள்

தென்காசி ஏப்ரல் 21

தென்காசி மாவட்டம் கடையநல்லூர் சட்டமன்ற தொகுதியில் நடைபெற்ற பிரச்சார கூட்டத்தில் கழக வேட்பாளர் கிருஷ்ணமுரளியை ஒரு லட்சம் வாக்குகள் வித்தியாசத்தில் வெற்றி பெற வைக்க வேண்டும் என்று அமமுக பொதுச்செயலாளர் டிடிவி தினகரன் வேண்டுகோள் விடுத்தார் கடையநல்லூர் சட்டமன்ற தொகுதியில் தேசிய ஜனநாயக கூட்டணி கட்சியின் கழக வேட்பாளராக போட்டியிடும் கிருஷ்ணமுரளி என்ற குட்டியப்பாவை ஆதரித்து அம்மா மக்கள் முன்னேற்றக் கழக பொதுச் செயலாளர் விடிவி தினகரன்சொக்கம்பட்டிபேருந்து நிறுத்தம் அருகில் கூடியிருந்த பொதுமக்கள் மத்தியில் தமிழ்நாட்டில் நடந்து கொண்டிருக்கிற மக்கள் விரோத ஆட்சிக்கு முடிவு கட்ட கடையநல்லூர் தொகுதியில் சொக்கம்பட்டியில் கூடியிருக்கிற மக்கள் சிந்தாமல் சிதறாமல் இரட்டை இலை சின்னத்தில் உங்களது வாக்குகளை அளிக்க வேண்டும் உங்களுடைய வேட்பாளர் முன்னாள் அமைச்சர் செந்தூர்பாண்டியன் புதல்வர் அவர் விட்டுச் சென்ற பணிகளை இவர் தொடர்ந்து செய்து வருகிறார் அவரை கடந்த தேர்தலில் அமோக வாக்குகள் வித்தியாசத்தில் வெற்றி பெற செய்ய வைத்த நீங்கள் இந்த முறையும் அதே போல மாபெரும் வெற்றியடைய செய்ய வேண்டும் ஒரு லட்சம் வாக்குகள் வித்தியாசத்தில் வெற்றி பெற வைக்க வேண்டும் சட்டமன்றத்தில் எதிர்க்கட்சி வரிசையில் இருந்து தன்னுடைய தொகுதிக்கு பணியாற்றி நிறைய திட்டங்களை கொண்டு வந்த அவர் இந்த முறை ஆளுங்கட்சியின் சட்டமன்ற உறுப்பினராக சட்டமன்றத்தில் பணியாற்ற உள்ளார் கடந்த தேர்தலில் அதிமுக அமமுக பிரிந்து நின்ற காரணத்தால் திமுக ஆட்சிக்கு வந்தது அதன் விளைவாக ஏழை எளிய மக்கள் நடுத்தர மக்கள், விவசாயிகள், அரசு ஊழியர்கள், ஆசிரியர்கள், மருத்துவர்கள், செவிலியர்கள், மாற்றுத்திறனாளிகள், என அனைத்து தரப்பினரும் இந்த ஐந்து ஆண்டுகளில் கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளனர் இந்த ஐந்தாண்டுகளில் தமிழகம் பின்னோக்கி தான் சென்றுள்ளது சுதந்திரம் பெற்ற நாள் முதல் அதிமுக பொதுச் செயலாளர் அண்ணன் எடப்பாடி பழனிச்சாமி ஆட்சி வரை 5 லட்சம் கோடி கடன் இருந்த தமிழ்நாட்டை தற்போது பத்து லட்சம் கோடியாக ஆக்கிய பெருமை மு.க ஸ்டாலினையேசாரும், திமுகவினர் தங்களது வாக்குகளை பெற ஆயிரம், இரண்டாயிரம் கொடுத்து வெற்றி பெறலாம் என்று நினைக்கின்றனர் அவர்களுடைய எண்ணத்தை முறியடிக்க வேண்டும் மீண்டும் புரட்சித்தலைவி அம்மா ஆட்சி அண்ணன் இபிஎஸ் தலைமையில் அமைய நீங்கள் அனைவரும் இரட்டை இலை சின்னத்தில் வாக்களிக்க வேண்டும் திமுக காங்கிரஸ் கூட்டணி மத்திய மாநில அரசாக இருந்த போது கூட 3 லட்சம் கோடி தான் தமிழகத்திற்கு காங்கிரஸ் அரசால் வழங்கப்பட்டது ஆனால் தற்போதைய மத்திய பாஜக அரசு இந்த 11 லட்சம் கோடி வரை தமிழகத்திற்கு வழங்கியுள்ளனர் ஆனால் இதையெல்லாம் மறைத்து பேசுகிறார் முதலமைச்சர் மத்திய அரசுடன் இணக்கமான மாநில ஆட்சி அமைந்தால் அனைத்து திட்டங்களையும் அனைவரும் பெற முடியும் அதனால் பொதுமக்கள் அனைவரும் இரட்டை இலை சின்னத்திற்கு வாக்களிக்க வேண்டும் என்று கேட்டுக்கொண்டார்.

# வாக்களிப்பது உங்கள் உரிமை கடமை வாக்காளர்களுக்கான விழிப்புணர்வு கலை நிகழ்ச்சி



ஈரோடு ஏப் 21

ஈரோடு டெக்ஸ்வேலியில் மாவட்ட தேர்தல் அலுவலர் மாவட்ட ஆட்சித்தலைவர் கந்தசாமி தலைமையில் தமிழ்நாடு சட்டமன்றபொதுத்தேர்தல் 2026ஐ முன்னிட்டு "வாக்களிப்பது உங்கள் உரிமை மற்றும் கடமை" வாக்காளர்களுக்கான விழிப்புணர்வு கலை நிகழ்ச்சியினை துவக்கி வைத்து பார்வையிட்டார். 100 சதவீதம் வாக்குப்பதிவை வலியுறுத்தும் வகையில் நடைபெற்றவிழிப்புணர்வு நிகழ்ச்சியில் அரசு இசை பள்ளி மாணவர்களின் கலை நிகழ்ச்சிகளையும் மற்றும் தேர்தல் தொடர்பான மேஜிக் விழிப்புணர்வுநிகழ்ச்சிநடைபெற்றதையும் பார்வையிட்டார். தொடர்ந்து அவர் 100 சதவீதம் வாக்குப்பதிவை வலியுறுத்தி வாக்காளர்களுக்கு தேர்தல் விழிப்புணர்வு துண்டு பிரசுரங்களை வழங்கியும் விழிப்புணர்வு ஏற்படுத்தினார். இந்நிகழ்ச்சியில் மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குனர் பிரியா, ஈரோடு வருவாய் கோட்டாட்சியர் சிந்துஜா, மாவட்ட ஊராட்சி செயலாளர் தனம் உட்பட துறை சார்ந்த அலுவலர்கள் கலந்து கொண்டனர்.



ராமநாதபுரத்தில் காந்திமதி அறக்கட்டளை இரண்டாம் ஆண்டு விழா நடைபெற்றது. ராமநாதபுரம் அரண்மனை மார்க்கெட் கறிக்கடை சந்து ஜே ஆர் பி காய்கனி கடை வளாகத்தில் காந்திமதி அம்மாள் நினைவாக அவரது திருவுருவப் படத்திற்கு காந்திமதி அறக்கட்டளை நிறுவனர் ஜே ஆர் பி மணிகண்டன் மலர் தூவி மரியாதை செலுத்தினார். நீலகண்டி ஊரணி வடக்குத்தெரு காந்திமதி அம்மாள் வழி வாரிசுதாரர்கள் மற்றும் குடும்பத்தினர் இணைந்து நிகழ்ச்சி கலந்து கொண்ட ஆன்மீக மக்களுக்கு மற்றும் வியாபாரிகளுக்கு அன்னதானம் வழங்கினர்.

## முசிறி அருகே

# மனைவி திட்டியதால் கார் ஓட்டுநர் தற்கொலை

திருச்சி, ஏப். 21

முசிறி அருகே தாத்தையங்கார் பேட்டை காவல் நிலைய எல்லைக்குட்பட்ட கோணங்கி பட்டியைச் சேர்ந்த கார் ஓட்டுநர் பிரசாந்த், மதுப்பழக்கத்திற்கு அடிமையானதால் ஏற்பட்ட மன உளைச்சலால் வீட்டில் எலி மருந்து உட்கொண்டு தற்கொலை செய்து கொண்டார். இது குறித்து தாத்தையங்கார் பேட்டை காவல்துறையினர் வழக்கு பதிவு செய்துள்ளனர். அவரது மனைவி கண்டித்தும், தகராறு செய்ததும் தற்கொலைக்குக் காரணம் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.



## திருச்சி

# தீபற்றி எரிந்த மாநகராட்சி குப்பை வாகனம்

திருச்சி, ஏப். 21

திருச்சி திருவானைக்காவல் மேம்பாலத்தில் குப்பைகள் ஏற்றிச் சென்ற சிறியரக வாகனத்தில் திடீரென தீ விபத்து ஏற்பட்டது. இதனால், குப்பை சேகரித்த தனியார் ஒப்பந்த ஊழியர்கள் அலறியடித்து கீழே இறங்கி ஓடினர். தீயை அணைக்க முயன்றும் பலனளிக்காததால், வாகனம் முழுவதுமாக எரிந்தது. இதுகுறித்து தகவல் அறிந்த ஸ்ரீரங்கம் தீயணைப்புத் துறையினர் தீயை அணைக்கும் பணியில் ஈடுபட்டுள்ளனர், தீ விபத்து குறித்து ஸ்ரீரங்கம் காவல்துறையினர்விசாரணைமேற்கொண்டுள்ளனர் இந்நிகழ்வு அப்பகுதியில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தி உள்ளது.



## தஞ்சாவூர் அன்னை சத்யா விளையாட்டு அரங்கில்

# 100 சதவீதம் வாக்களிக்க வலியுறுத்தி நீச்சல் பயிற்சி

தஞ்சாவூர் ஏப்ரல் 21

தஞ்சாவூர் அன்னை சத்யா விளை யாட்டு அரங்கில்100 சதவீத ம் வாக்களிக்க வலி யுறுத்தி நீச்சல் வீரர் வீராங்கனைகள் பயிற்சி மேற் கொண்டு விழிப்புணர்வு ஏற்படுத்தினர்

தமிழக சட்டசபை தேர்தல் வருகிற 23ஆம் தேதி வியாழக்கிழமை நடைபெறுகிறது . இதையொட்டி மாவட்ட நிர்வாக சார்பில் பல்வேறு விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் நடத்தப்பட்டு வருகிறது .மேலும் பல்வேறு தனி யார் அமைப்புகள் சார் பிலும் விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் நடத்தப் பட்டு வருகிறது

அதன்படி தமிழ்நாடு விளையாட் டு மேம்பாட்டு ஆணையம்சார்பில்தேர்தல்100சதவீதம்வாக்களிக்க வலியுறுத்தி விழிப்புணர்வு நிகழ்ச்சி நடத்தப்பட்டது

அன்னை சத்யா விளையாட்டு அரங்கத்தில் உள்ள குந்தவை நீச்சல் குளத்தில் 100க்கும் மேற்பட்ட நீச்சல் வீரர் வீராங்கனைகள் தேர்தல் நாள் அன்று அனைவரும் 100 சதவீதம் வாக்களிக்க வேண்டும் என்பதனைவலியுறுத்திநீச்சல்பயிற்சிமேற்கொண்டு விழிப்புணர்வு ஏற்படுத்தினர்

இந்த நிகழ்ச்சிக் கான ஏற்பாடுக ளை மாவட்ட விளையாட் டு அலுவலர் செந்தில்குமார் ,நீச்சல் பயிற்சியாளர் ரஞ்சித் குமார் மற்றும் ஊழியர்கள் செய்திருந்தனர்.

# துறையூர்: அங்கன்வாடி பணியாளர்கள் வாக்காளர் விழிப்புணர்வு பேரணி




திருச்சி, ஏப். 21

திருச்சி மாவட்டம் துறையூரில் 100% வாக்குப்பதிவை வலியுறுத்தி அங்கன்வாடி பணியாளர்கள் விழிப்புணர்வு பேரணியை நடத்தினர். துறையூர் வட்டாட்சியர் சிவக்குமார்

இந்த பேரணியை தொடங்கி வைத்தார். வட்டாட்சியர் அலுவலகத்தில் தொடங்கிய பேரணி, நகரின் முக்கிய வீதிகள் வழியாக முசிறி பிரிவு சாலை ரவுண்டானா வரை நடைபெற்றது. இதில் நூற்றுக்கும் மேற்பட்ட அங்கன்வாடி பணியாளர்கள் பங்கேற்றனர்.

## நாகர்கோவில் தொகுதியில்

# அனைத்து தரப்பு மக்களின் ஆதரவுடன் மீண்டும் வெற்றி பெறுவேன்: எம் ஆர் காந்தி



நாகர்கோவில் ஏப் 21

நாகர்கோவில் தொகுதி பாரதிய ஜனதா கட்சி வேட்பாளர் எம். ஆர். காந்தி, நேற்று முக்கிய பிரமுகர் இல்லங்களுக்கு சென்று வாக்கு சேகரித் தார். நேற்று மாலையிலும் ஆட்டோக்களில் தெருக் களுக்கு சென்றும், முக்கிய வீதிகளிலும் அவர் வாக்கு சேகரித்தார். பாரதிய ஜனதா வெளியிட்டுள்ள தேர்தல் அறிக் கையை சுட் டிக்காட்டி பேசி, எம்.ஆர். காந்தி எம். எல்.ஏ.வாக்கு சேகரிப்பில் ஈடுபட்டார்.

அப்போது அவர் கூறுகையில்,

தேசிய ஜனநாயக கூட்டணி தமிழ்நாட்டில் வெற்றி பெற்றால் மகளி ருக்கு ரூ.2 ஆயிரம் உதவி தொகை வழங்க நடவடிக்கை எடுக்கப்படும். தீபாவளி, பொங்கல், தமிழ் புத்தாண்டுக்கு தலா ஒரு சிலிண்டர்கள் இலவசமாக வழங்கப்படும். தைப்பூச விழா மாநில விழாவாக கொண்டாடப்படும். ஒரு முறை அனைத்து குடும்பத் துக்கும் ரூ.10 ஆயிரம் நிதி வழங்கப்படும் போன்ற திட்டங்களை செயல்பടுத் துவோம். நாகர்கோவில் மாநகரின் வளர்ச்சிக் கானதிட்டங்கள்முழுமையாகசெயல்படுத்தப்படும்.

நாகர்கோவிலில் குடி நீர் பிரச்சினைக்கு தீர்வு காணும் வகையில் நடவ டிக்கை எடுக்கப்படும். தற்போது புத்தன் அணை திட்டத்தின் தண்ணீர் கொடுக்கிறார்கள். ஆனா லும் மாநகரம் முழுவதும் தற்போது குடிநீர் பிரச் சினை உள்ளது. பல பகு திகளில் குடிநீர் சரியாக வர வில்லை என்கிறார்கள். எங்கள் கூட்டணி வெற்றி பெற்று ஆட்சி அமைந் தால், குடிநீர் தட்டுப்பாடு பிரச்சினை தீர்க்கப்படும். எனவே தாமரை சின்னத்துக்கு வாக்குகளை தாருங் கள் என்றார். முன்னதாக எம்.ஆர்.காந்தி கூறுகையில், அனைத்து தரப்பு மக்களின் ஆதரவும் பார திய ஜனதாவுக்கு உள்ளது. எனவே இந்த முறையும் நாகர்கோவில் தொகு தியில் மீண்டும் வெற்றி பெறுவோம் என்றார். எம். ஆர். காந்திக்கு ஆதரவாக அவரது கட்சியினரும் வீடு, வீடாக வாக்கு சேகரிப்பில் ஈடுபட்டுள்ளனர்.

# அமெரிக்கா, இஸ்ரேல் உடனான போரில் 3,375 பேர் உயிரிழப்பு ஈரான் தகவல்

தெஹ்ரான், ஏப். 21

அமெரிக்கா மற்றும் இஸ்ரேல் இணைந்து கடந்த பிப்ரவரி மாதம் 28ந்தேதி ஈரான் மீது தாக்குதல் நடத்தியது. ஈரானும் பதில் தாக்குதல் நடத்தியது. ஒரு மாதத்திற்கு மேலாக இந்த போர் நீடித்தது. கடந்த 7ந்தேதி இரண்டு வார இடைக்கால போர் நிறுத்தம் ஏற்பட்டது.

இந்த நிலையில் போரில் ஈரானில் 3375 உயிரிழந்ததாக ஈரானின் சட்டப்பூர்வ மருத்துவ அமைப்பு தெரிவித்துள்ளது. இந்த அமைப்பின் தலைவர் அப்பாஸ் மஸ்ஜெதி இது தொடர்பாக கூறியிருப்பதாவது:

'இறந்தவர்களில் 2875 பேர் ஆண்கள், 496 பேர் பெண்கள், 383 பேர் 18 வயது மற்றும் அதற்கும் குறைந்த வயதுடையவர்கள். இன்னும் 4 உடல்கள் அடையாளம் கண்டறியப்படவில்லை. இதில் வீரர்கள் எத்தனை பேர் பொதுமக்கள் எத்தனை பேர் என கணக்கிடப்படவில்லை.' இவ்வாறு அவர் தெரிவித்தார்.

# சாதி, மதமற்றவர்; இயக்குநர் பார்த்திபனுக்கு சான்றிதழ் வழங்க ஐகோர்ட் உத்தரவு

சென்னை, ஏப்.21

நடிகர் பார்த்திபன், சென்னை சோழிங்கநல்லூர் வட்டாட்சியரிடம் கடந்த மார்ச் 20, 2026 அன்று சாதி இல்லை, மதம் இல்லை சான்றிதழ் கோரி விண்ணப்பித்திருந்தார். இந்த நிலையில், தனது விண்ணப்பத்தின் மீது விரைந்து நடவடிக்கை எடுக்க வட்டாட்சியருக்கு உத்தரவிடக் கோரி சென்னை ஐகோர்ட்டில் ரிட் மனுவை தாக்கல் செய்திருந்தார்.

அந்த மனுவில், தான் 1958ல் பிறந்ததாகவும், பெற்றோர்பிறப்பைப் பதிவு செய்யவில்லை என்றும் குறிப்பிட்டுள்ளார். பழைய எஸ்.எஸ்.எல்.சி முறையில் 11ம் வகுப்பு வரை படித்துவிட்டு, பள்ளிச் சான்றிதழ்களைப் பெறாமலேயே படிப்பை நிறுத்தியதால், தன்னிடம் சாதி அல்லது மதத்தைக் குறிக்கும் எந்தவொரு ஆவணமும் தற்போது கைவசம் இல்லை என்றும் கூறியிருந்தார்.

இந்தமனுநீதிபதிஎம்.தண்டபாணிமுன்னிலையில் இன்று விசாரணைக்கு வந்தது. விசாரணை முடிவில், பார்த்திபனுக்கு சாதி, மதம் அற்றவர் என சான்றிதழ் வழங்க ஐகோர்ட் உத்தரவிட்டது. ஒருவாரத்தில் சான்றிதழை வழங்க வேண்டும் என்றும் கோர்ட் தனது உத்தரவில் தெரிவித்துள்ளது.

சமீபத்தில் "உஸ்தாத் பகத் சிங்" என்ற தெலுங்கு பட விளம்பரத்தின் போது, பார்த்திபன் தன்னை "நாயுடு பையன்" என்று அறிமுகப்படுத்திக் கொண்டது பெரும் சர்ச்சையை ஏற்படுத்தியது நினைவிருக்கலாம்.

# கோவை தெற்கு தொகுதி தவெக வேட்பாளருக்கு ரோபோ வாக்கு சேகரிப்பு



கோவை ஏப்:21

கோவை தெற்கு தொகுதி தவெக வேட்பாளர் செந்தில்குமார் கோவை ரேஸ் கோர்ஸ் பகுதியில் பொதுமக்களிடம் புதுமையான வகையில் ரோபோவை பிரச்சார கருவியாக பயன்படுத்தி விசில் சின்னத்திற்கு வாக்கு சேகரித்தார் இதனால் அப்பகுதி மக்கள் வித்தியாசமான முறையில் வாக்கு சேகரிக்கும் விதத்தைகண்டுசென்றனர். உடன்தொண்டர்கள்விசில் அடித்துக் கொண்டும் வாக்கு சேகரித்தனர்.



தமிழ்நாடு சட்டமன்றப் பொதுத்தேர்தல் 2026ஐ முன்னிட்டு, தேனி மாவட்டம் கொடுவிலார்பட்டி பகுதியில் அமைந்துள்ள தேனி கம்மவார் சங்கம் கல்லூரியில் (19.04.2026) நான்கு சட்டமன்றத் தொகுதிகளுக்கான வாக்கு எண்ணும் மையத்தில் மேற்கொள்ளப்பட்டு வரும் முன்னேற்பாடுப் பணிகள் ஆய்வு செய்யப்பட்டது. இந்த ஆய்வினை மாவட்ட தேர்தல் அலுவலரும், மாவட்ட ஆட்சித்தலைவருமான ரஞ்ஜீத் சிங் அவர்கள்தலைமையில், மாவட்ட காவல் கண்காணிப்பாளர் சினேஹாப்ரியா அவர்கள் முன்னிலையில் நேரில் பார்வையிட்டு மேற்கொண்டனர். வாக்கு எண்ணும் நாளில் எந்தவித குறையும் இல்லாமல் சீரான முறையில் பணிகள் நடைபெறுவதற்கான ஏற்பாடுகள் குறித்து அதிகாரிகள் ஆய்வு செய்து தேவையான வழிகாட்டுதல்களையும் வழங்கினர்.

# எலப்பாக்கத்தில் சின்மய விநாயகர் பாலமுருகன் திருக்கோவிலில் 66வது ஆண்டு சித்திரை கிருத்திகை பால் காவடி பெருவிழா

மதுராந்தகம் ஏப்ரல் 20

செங்கல்பட்டு மாவட்டம்ம துராந்தகம் அருகே உள்ள எலப்பாக்கம் சின்மய விநாயகர் பாலமுருகன் திருக்கோவிலில் பரணி விழாவும் கிருத்திகை பால் காவடி பெரு விழா அதிகாலை சுவாமிக்கு சிறப்பு அபிஷேக அலங்காரம் ஆராதனைகள் நடைபெற்றது.



தொடர்ந்து உள்ளூர் மற்றும் வெளியூர்களில் இருந்து வந்த பக்தர்கள் நேர்த்திக்கடன் செலுத்த வேண்டி பால் காவடி, பன்னீர் காவடி, புஷ்ப காவடி, எடுத்து ஊர்வலமாக சென்றடைந்து மூலவரான பாலமுருகனுக்கு அபிஷேகம் செய்தனர். பின்பு சிறப்பு மலர் அலங்காரத்தில் எழுந்தருளிய முருகப்பெருமான் பக்தர்களுக்கு அருள் பாலித்தார். இதில் ஏராளமான பக்தர்கள் நீண்ட வரிசையில் நின்று சாமி தரிசனம் செய்தனர். இந்நிகழ்ச்சிக்கான ஏற்பாட்டினை விழா குழுவினர் சிறப்பாக செய்திருந்தனர்.

## திருவெண்ணெய்நல்லூரில்

# திமுக வேட்பாளர் பொன்.கௌதமசிகாமணியை ஆதரித்து பிரேமலதா விஜயகாந்த் உதயசூரியன் சின்னத்திற்கு வாக்கு சேகரித்தார்



திருவெண்ணெய்நல்லூர் நகரத்தில் திருக்கோவிலூர் சட்டமன்ற தொகுதி திமுக வேட்பாளர் பொன் கௌதமசிகாமணியை ஆதரித்து மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணி கட்சி சார்பில் தேமுதிக பொதுச்செயலாளர் பிரேமலதா விஜயகாந்த் பிரச்சாரம் மேற்கொண்டார். அப்போது பேசிய அவர், கடந்த 5 ஆண்டுகளில் முன்னாள் அமைச்சர் பொன் முடி திருக்கோவிலூர் சட்டமன்றத் தொகுதிக்கு உட்பட்ட கிராம பகுதிகளுக்கு அவர் கொண்டு வந்த மக்கள் நல திட்டங்களையும், திமுக அரசின் சாதனைகளையும் பொதுமக்களிடம் எடுத்து கூறினார். மேலும் திமுக அரசின் தேர்தல் வாக்குறுதிகளையும் பொதுமக்கள் மற்றும் பெண்கள் மத்தியில் எடுத்து கூறி மெய்கண்டார்

திடலில் உதயசூரியன் சின்னத்திற்கு வாக்கு சேகரித்தார். இதில் முன்னாள் அமைச்சர்பொன்முடி எம்.எல்.ஏ. சூர்யா கல்வி குழுமம் தலைவர் விசாலாட்சி பொன்முடி முன்னாள் தமிழ்நாடு கிரிக்கெட் வாரிய தலைவர் டாக்டர் அசோக் சிகாமணி நகர செயலாளர் பூக்கடை கணேசன் ஒன்றிய செயலாளர் பி.வி. ஆர்.விசுவநாதன், ஒன்றிய சேர்மன் ஓம் சிவசக்திவேல், பேரூராட்சி மன்ற தலைவர் அஞ்சுகம் கணேசன், உள்ளிட்ட கூட்டணி கட்சி நிர்வாகிகள் மற்றும் மகளிர் அணியினர் ஏராளமானோர் கலந்து கொண்டனர்

## தஞ்சாவூர் மாவட்ட

# 8 சட்டசபை தொகுதிகளில் பணியில்ஈடுபடும் 12 ஆயிரம் வாக்குப்பதிவு அலுவலர்களுக்கு இரண்டாம் கட்ட பயிற்சி



தஞ்சாவூர் ஏப்ரல் 21

தஞ்சாவூர் மாவட்டத்தில் 8 சட்டசபை தொகுதிகளில் பணியில்ஈடுபடும் வாக்குப்பதிவு அலுவலர்களுக்கு நடந்த இரண்டாம் கட்ட பயிற்சியை மாவட்ட கலெக்டர் பிரியங்கா பங்கஜம் பார்வையிட்டார்

தமிழக சட்டசபை தேர்தல் வருகிற 23ஆம் தேதி நடைபெறுகிறது தஞ்சாவூர் மாவட்டத்தில் 8 சட்டசபை தொகுதிகளுக்கு தேர்தல் நடைபெறுகிறது இந்த தேர்தலில் பணியாற்ற உள்ள 12,004வாக்கு பதிவு அலுவலர்களுக்கு மாவட்டத்தில் எட்டு சட்டசபை தொகுதிகளில் அமைக்கப்பட்டபயிற்சி மையங்களில் இரண்டாம் கட்ட பயிற்சி நடைபெற்றது தேர்தல் நடத்தும் அலுவலர்கள் உதவி தேர்தல் நடத்தும் அலுவலர்கள் மற்றும் 226 மண்டல அலுவலர்கள் இணைந்து பயிற்சியை வழங்கினர்

மேலும் பயிற்சியில் கலந்து கொண்டு வாக்குப்பதிவு அலுவலர்கள்,தபால் வாக்கு செலுத்தும் வசதிக்காக அமைக்கப்பட்ட உதவி மையங்கள் மூலம் தங்களதுதபால்வாக்கினை பதி செய்தனர்

இந்த பயிற்சியை தஞ்சாவூர்மாவட்ட கலெக்டர்பிரியங்கா பங்கஜம் இந்திய தேர்தல் ஆணையம் நியமித்த தேர்தல் பார்வையாளர்கள் மாவட்ட வருவாய் அலுவலர்தியாகராஜன் மற்றும் தொடர்புடைய அதிகாரிகள் இணைந்து கண்காணித்தனர்

இந்த பயிற்சியில் தஞ்சாவூர் மாவட்டத்தின் அனைத்து சட்டசபை தொகுதிகளிலும் போட்டியிடும் வேட்பாளர்களும் கலந்து கொண்டனர்



நாகப்பட்டினம் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் சட்டமன்ற தேர்தல்2026ஐ முன்னிட்டு செயல்பட்டு வரும் தேர்தல் கட்டுப்பாட்டு அறை, தேர்தல் தொடர்பான செய்திகள் தினசரி நாளிதழ்களில் ஆய்வு செய்யப்படுவதை ஊடகசான்றளிப்பு மற்றும் கண்காணிப்பு மையத்தில் தேர்தல் செலவீன பார்வையாளர் நர்சிங்குமார் கல்கோ நேரில் பார்வையிட்டுஆய்வுமேற்கொண்டார்.நாகப்பட்டினம்மாவட்டஆட்சியர்அலுவலகத்தில் சட்டமன்ற தேர்தல்2026ஐ முன்னிட்டு செயல்பட்டு வரும் தேர்தல் கட்டுப்பாட்டு அறையில் தேர்தலை கண்காணித்திட அமைக்கப்பட்ட பறக்கும் படைக்குழுக்கள், நிலையான கண்காணிப்புக்குழுக்கள், வீடியோ கண்காணிப்புக் குழுக்கள் ஆகியவற்றையும், தேர்தல் தொடர்பான செய்திகள் தினசரி நாளிதழ்களில் ஆய்வு செய்யப்படுவதையும் மேலும் ஊடக சான்றளிப்பு மற்றும் கண்காணிப்பு மையத்தையும் 163.நாகப்பட்டினம் சட்டமன்ற தொகுதிக்கான தேர்தல் செலவீன பார்வையாளர் நர்சிங்குமார்கல்கோநேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார். இந்த ஆய்வின்போது மாவட்ட செய்தி மக்கள் தொடர்பு அலுவலர் மீ.செல்வகுமார், மாவட்ட சமூகநல அலுலலர் கி.திவ்யபிரபா மற்றும அரசு அலுவலர்கள் உடனிருந்தனர்.

**FORMAT C-1**

**(forcandidatetopublishinNewspapers,TV)**

**DeclarationaboutCriminal Cases**

( As per the judgement dated 25th september, 2018, of Hon'ble Superme Court in WP(Civil) No. 536 of 2011( Publish Interest Foundation & Ors, Vs, Union of India & Anr)

NameandAddressofCandidate::B.Sheik bareeth,
S/O.Babu,No:39,Asathstreet,asanathpuram,
DindigulWest,Dindigul- 624002.

NameofPoliticalParty : TamilagaValvurimaiKatchi

Name of Election : TAMILNADU LEGISLATIVE ASSEMBLYGENERALELECTION-2026

NameofConstituency : 132 DINDIGUL

IS.ALEX(Nameofcandidate),acandidatefortheabovementionedelection,declareforpublic information the following details about my criminal antecedents

(A)PendingCriminalCases

| S.No | Name of court | Case No. And Dated | Statusof case (S) | Section(s) of Acts concerned and brief description of offence(s) |
|---|---|---|---|---|
| 1 | Nil | Crimeno: 0060/2022 | REFERRED | IPC143,341(TOWNSOUTHPS DINDIGUL) |
| 2 | Nil | Crimeno: 0623/2018 | REFERRED | CRPC151,(TOWNNORTHPS DINDIGUL) |
| 3 | Nil | Crimeno: 0160/2022 | PENDINGTRIAL | IPC143,283,341 (TOWNNORTHPSDINDIGUL) |
| 4 | Nil | Crimeno: 0145/2022 | REFERRED | CRPC151, (TOWNSOUTHPSDINDIGUL) |
| 5 | Nil | Crimeno: 0130/2022 | PENDINGTRIAL | IPC143,283,341 (TOWNNORTHPSDINDIGUL) |
| 6 | Nil | Crimeno: 0401/2024 | PENDINGTRIAL | IPC294(B),324,506(2),(TOWN NORTHPSDINDIGUL) |

**(B)Detailsaboutcasesofconvictionforcriminaloffences**

| S.No | NameofCourt& date(s)oforders(s) | Descriptionofoffence(s)& Punishmentimposed | Maximum Punishmentimposed |
|---|---|---|---|
| 1 | Nil | Nil | Nil |
| 2 | Nil | Nil | Nil |
| 3 | Nil | Nil | Nil |

*In the case of election to council of states or election to Legislative Council by MLAs, mention the election concerned in place of name of constituency.

Note:

(i) The Particulars regarding criminalcases pending against thecandidate shall be in boldletters.

DHINA TAMIL DAILY : Published and Printed By Rajasingh, Published from 16 C, 246 Cross, Professor Joseph Street, Simon Nagar, Nagercoil - 629001.
Printing at Sree Murugan Printers, 209/A, Vaithyanathapuram, Kottar Post, Nagercoil - 629002. Ph : 99944 66200. Editor : Rajasingh. All Claims are subject to the Nagercoil Jurisdiction.